**ஸ்காபறோவில் பச்சைக் கொள்கலத் திட்டம்**
**இதழ் 3: 2004 மார்ச்**

**ஸ்காபறோ மக்களுக்கு இரு தடவைகள் பாராட்டுத் தெரிவிக்கிறோம்**
ஸ்காபறோ மக்களுக்கு எமது பாராட்டுகள்! நீங்கள் சுற்றாடலைப் பேணும் தீரர்கள் என்பதை நிரூபித்துள்ளீர்கள். உங்களுள் 90 விழுக்காட்டுக்கு மேற்பட்டோர் இம்மாநகரத்தின் பச்சைக் கொள்கலத் திட்டத்தில் பங்கு பங்குபற்றுகிறீர்கள். மாதந்தோறும் 2,200 தொன்னுக்கு மேற்பட்ட சேதனக் கழிவு நிரவல்புலம் செல்வதைத் தவிர்ப்பதற்கு நீங்கள் உதவியிருக்கிறீர்கள். இவ்வாறு திசைதிருப்பப்படும் சேதனக் கழிவு தரைவண்ணத்துக்கும் பயிர்ச்செய்கைக்கும் உகந்த நல்வளம் படைத்த கலப்புரமாக மாற்றப்படுகிறது.

இம்மாநகரத்துக்குச் சொந்தமான கீல் பள்ளத்தாக்கு நிரவல்புலம் 2002 திசம்பர் 31ம் திகதி மூடப்பட்டது. தற்பொழுது எமது குப்பை முழுவதையும் நாம் மிச்சிகனுக்கே ஏற்றி அனுப்புகிறோம். ஆதலால் எமது கழிவை அகற்றும் செலவு தொன்னுக்கு $12 என்ற நிலையிலிருந்து தொன்னுக்கு $52 ஆக அதிகரித்துள்ளது. உங்கள் பச்சைக் கொள்கலங்களைத் திறம்படப் பயன்படுத்துவதன் மூலம் மாதந்தோறும் மிச்சிகனுக்குச் செல்லும் குப்பை ஊர்திகளுள் 65 குறைக்கப்பட்டுள்ளன. சுற்றாடலைப் பொறுத்தவரை இது நல்ல சேதி ஆகும். அந்த வகையில் நீங்கள் வகிக்கும் பங்கு மிகவும் முக்கியமானது.

பச்சைக் கொள்கலத் திட்டத்துக்கு நீங்கள் காட்டும் ஆதரவுக்கு மிக்க நன்றி!

**ஸ்காபறோவும் எற்றோபிக்கோவும் ரொறன்ரோ மாநகரத்தின் ஏனைய குறிச்சிகளுக்கு வழி காட்டுகின்றன**
ஸ்காபறோ, எற்றோபிக்கோ நகரங்களில் பச்சைக் கொள்கலத் திட்டம் ஈட்டிய வெற்றியை அடிப்படையாகக் கொண்டு, அத்திட்டததை 2004 அக்டோபர் மாதத்தில் ரொறன்ரோ, யோர்க், ஈஸ்ட் யோர்க் நகரங்களிலும் - அதாவது இன்னும் 210,000 வீடுகளிலும் மாநகராட்சி மன்றம் புகுத்தப் போகிறது. 2005ம் ஆண்டு இலையுதிர் காலத்தில் நோர்த் யோர்க் நகரத்திலும் அத்திட்டம் புகுத்தப்படும்.

**பிளாஸ்திக்கு வகைகளை இடலாகாது! அதற்கு உங்கள் உதவியை நாடுகிறோம்!**
உங்கள் கொள்கலத்துக்கு ஒரு பிளாஸ்திக்குப் பையை உள்ளுறையாகப் பயன்படுத்துவது சரியே. ஆனால் பிளாஸ்திக் பைகளையும் பாண் உறைகளையும் வேறு பிளாஸ்திக்கு உறைகளையும் உங்கள் குப்பைக்குள் இடுவது *சரியல்ல.* மிதமிஞ்சிய பிளாஸ்திக்கு வகைகளினால் படிமுறையிடும் களத்தின் ஆக்கத்தரம் பெரிதும் கெடுகிறது.

பிளாஸ்திக்கு உறைகளை அப்புறப்படுத்திய பின்னரே உங்கள் சேதனக் கழிவுகளைக் கொள்கலத்தினுள் இடவும் (எ-கா: உறையை அப்புறப்படுத்தி சான்ட்விச் பொருக்கை இடவும்). எமது சேதனக் கழிவு படிமுறையிடும் களத்துப் பொறிமுறைகள் உங்கள் கொள்கலத்து உள்ளுறைகளாக நீங்கள் பயன்படுத்தும் பைகளை அப்புறப்படுத்தும் விதமாகவே வடிவமைக்கப்பட்டுள்ளன - அவை பிளாஸ்திக்கு உறைகளை அப்புறப்படுத்த வல்லவை அல்ல.

அதாவது பிளாஸ்திக்கு வகைகள் கலப்புர உற்பத்திக்கு ஆகா. துப்புரவான, திறமான கலப்புர உற்பத்திக்கு நீங்கள் புரியும் உதவியை நாம் மெச்சுகிறோம்.

**பிளாஸ்திக்குப் பையைப் பயன்படுத்தி "அருவருப்பை" சமாளிக்கும் விதம்**
உங்கள் உள்ளக சமையலறைக் கொள்கலத்துக்கு அல்லது பச்சைக் கொள்கலத்துக்கு பிளாஸ்திக்குப் பையை உள்ளுறையாகப் பயன்படுத்தி "அருவருப்பை" சமாளிக்கலாம் (அதற்கென விசேடமான பைகளை வாங்கத் தேவையில்லை… நீங்கள் பாவித்த கொள்வனவுப் பைகளையே பயன்படுத்தலாம்). இரு கொள்கலங்களுக்கும் உள்ளுறை இடத் தேவையில்லை. உங்கள் சமையலறைக் கொள்கலத்துக்கு உள்ளுறை இட்டால், நீங்கள் இரு தடவைகள் கழிவில்

முட்டத் தேவையில்லை. உங்கள் உள்ளகக் கொள்கலத்தில் நிரம்பிய பிளாஸ்திக்குப் பையின் வாயை முறுக்கி அல்லது அதற்கு இளக்கமாய் முடிச்சுப் போட முடியுமானால் முடிச்சுப் போட்டு, அதனை வெளிப்புறத்துப் பச்சைக் கொள்கலத்தினுள் இடவும். படிமுறையிடும் களத்தில் சேதனக் கழிவையும் பிளாஸ்திக்குப் பையையும் புறம்பாக்குவதற்கு அது உதவும்.

உங்கள் சமையலறைக் கொள்கலத்துக்கு அல்லது பச்சைக் கொள்கலத்துக்கு உள்ளுறை இடுவதனால், குளிர்காலத்தில் உதிரிக் கழிவுகள் கொள்கலத்தின் உட்பக்கத்தில் உறைவதைத் தடுக்கலாம். ஆதலால் குப்பை சேகரிப்போர் சேதனக் கழிவுகளைக் குப்பை-ஊர்திக்குள் கொட்டிச் சிந்துவதையும் தடுக்கலாம்.

**தயவுசெய்து எடையைக் கூட்ட வேண்டாம்**

20 கிலோகிறாம் (44 இறாத்தல்) எடைக்கு மேற்படும் கொள்கலமோ பையோ அப்புறப்படுத்தப்பட மாட்டாது. ஆகவே உங்கள் மிதமிஞ்சிய கழிவை ஒரு கண்ணாடிப் பிளாஸ்திக்குப் பையில் இட்டு—பல சிறிய பைகளில் இடாது, ஒரே ஒரு பையில் இட்டு உங்கள் பச்சைக் கொள்கலத்துக்கு அருகில் வைக்கவும். உணவுக் கழிவுகள் அல்லாத (கழிவுக்கச்சுகள், பிராணிகளின் கழிவுகள் போன்ற) கழிவுகளைப் பிராணிகள் நாடா. எனவே அவற்றை மிதமிஞ்சிய கழிவுகளுக்குரிய பையில் இட்டு வைத்தல் நலம். நீங்கள் $15 விலைக்கு ஒரு புதிய வெளிப்புறப் பச்சைக் கொள்கலத்தை வாங்கலாம் ( $4 விலைக்கு ஓர் உள்ளக சமையலறைக் கொள்கலத்தை வாங்கலாம்). விபரங்களுக்கு “புதிய கொள்கலத்தைப் பெற்றுக்கொள்ளும் விதம்” என்ற பகுதியைப் பார்க்கவும்.

**புதிய கொள்கலத்தைப் பெற்றுக்கொள்ளும் விதம்**

உங்கள் பச்சைக் கொள்கலம் தெறித்தால் அல்லது உடைந்தால், அதனை இடைமாற்று நிலையத்துக்கு எடுத்துச் செல்லவும். மாநகரம் உங்களுக்கு கட்டணமின்றி ஒரு புதிய கொள்கலத்தை வழங்கும் (இது உங்கள் மீள்பாவனைப் பெட்டிகளுக்கும் பொருந்தும்). மேலதிக விபரங்களுக்கு அழைக்கவும்: 416 338-2010. புதிய கொள்கலத்தைப் பெற்றுக்கொள்வதற்கு அல்லது புதிய அல்லது இரண்டாவது கொள்கலத்தை வாங்குவதற்குப் பின்வரும் நிலையத்துக்குச் செல்லவும்:

Scarborough Transfer Station
1 Transfer Place
(north on Markham Road, left on Nugget Avenue)
செவ்வாய் முதல் வெள்ளி வரை: காலை 6:00 முதல் மாலை 5:30 வரை
சனி: காலை 6:30 முதல் பகல் 12:30 வரை

**படிமுறையிடும் விதம்**

1. வீதியோரத்தில் இட்டு வைக்கப்படும் உங்கள் சேதனக் கழிவு வாகனங்களில் ஏற்றப்பட்டு டவ்றின் சேதனக் கழிவு பதப்படுத்தல் நிலையத்துக்கு கொண்டுசெல்லப்படும்.
2. பணியாளர்கள் சேதனக் கழிவைப் பார்வையிட்டு, தேவைப்படாத பெரிய கூறுகளை அகற்றுவார்கள்.
3. திரவ அழுத்தம் கொண்டு (ஒரு பெரிய கலவைப் பொறி போன்று) சுழலும் பொறி ஒன்று அக்கழிவுகளை மசித்துக் கூழாக்கும்
4. உயிர்வளி அற்ற நிலையில் பெருகும் நுண்ணுயிர்கள் மூலம் திண்மங்களை உருக்குலைக்கும் படிமுறையினால் (“anaerobic digestion”) கழிவுக்கூழ் திண்மப்படுத்தப்படும்.
5. கழிவுத் திண்மம் வேறொரு நிலையத்துக்கு எடுத்துச்செல்லப்பட்டு கலப்புரமாக மாற்றப்படும். தரைவண்ணத்துக்கும் பயிர்ச்செய்கைக்கும் பிறவற்றுக்கும் அது பயன்படுத்தப்படும்.

**இடக்கூடிய/இடக்கூடாத கழிவுகளின் நிரல்**
பச்சைக் கொள்கலத்தினுள்

- பழவகை, மரக்கறிக் கழிவுகள்
- இறைச்சி, சிப்பி, மீன் வகைகள்
- பஸ்டா, பாண், தானிய உணவு வகைகள்
- முட்டைக் கோது பாலுணவு வகைகள்
- காப்பிக் கட்டை, வடி, தேயிலைச் சரைகள்
- அழுக்கு துடைப்புத் தாள், ஒற்றுத் தாள் வகைகள்
- அழுக்கடைந்த உணவுச் சரைகள்: உடன் உணவு பொதியும் தாள், ஐஸ் கிறீம் பெட்டிகள், மவின் தாள், மா மற்றும் சீனிச் சரைகள்
- கடதாசி - காப்பிக் குடுவைகள், கடதாசித் தட்டுகள்
- இனிப்பு, விசுக்கோத்து, கேக்கு வகைகள்
- வேகும் பண்டத்தில் சேரும் கூறுகள், மூலிகை, வாசனைச் சரக்கு வகைகள்
- மண்ணுடன் கூடிய வீட்டுத் தாவரங்கள்
- கழிவுக் கச்சுகள், உடல்தூய்மை பேணும் பொருட்கள்
- பிராணிகளின் கழிவு, படுக்கை (எ-கா: பறவை/கொறிவிலங்குக் கூடுகள்), பிராணிகளின் மலம்
- வளர்ப்புப் பிராணிகளின் உணவு வகைகள்

தயவுசெய்து பின்வரும் கழிவுகளை இடவேண்டாம்…(அவை உருக்குலையா. அவற்றைக் கலப்புரமாக மாற்ற முடியாது):

- பிளாஸ்திக்குப் பொதி, பை, சான்விச் பை வகைகள்
- பிளாஸதிக்கினாலான உணவுக் கலங்கள் (எ-கா: தயிர், மார்ஜறின் கலங்கள்), கத்தி, முள்ளுக் கரண்டி வகைகள்
- பிளாஸ்திக்கினாலான பால் பைகள்
- ஸ்டைறோவோம் (styrofoam), இறைச்சித் தாம்பாள உள்ளுறை வகைகள்
- மினுங்கல் சுருள்
- மெழுகுத் தாள்
- மெழுகுதிரி
- செயற்கைப் பூ, தாவர வகைகள்
- தோல், துணி, உடை வகைகள்
- கம்பளம், விரிப்பு வகைகள்
- சிகரட்டு அடிக்கட்டைகள், புகையிலை
- தக்கைகள் (வைன் போத்தில்கள் முதலியவற்றுக்குரியவை)
- சுவிங்கம்
- காது துப்புரவாக்கி, பஞ்சுப் பந்து, ஒப்பனை அகற்றும் அட்டை வகைகள்
- குழந்தைகளை ஒற்றித் துடைக்கும் துணி வகைகள்
- ஒற்றி வீசும் துணி வகைகள்
- உலர்த்தி - தூசு, தகடுகள் (dryer lint & dryer sheets)
- உறிஞ்சிப் பை, கழிவு வகைகள் (vacuum cleaner bags and contents)
- இறகுகள்
- முடி, பிராணிகளின் உரோமம்
- இறந்த பிராணிகள்
- கணப்புச் சாம்பல் அல்லது இறைச்சி சுடும் அடுப்பு (BBQ) சாம்பல்
- மரச் சாமான்கள், மரத் துணுக்குகள்

***கேள்விகள் எவையேனும்? மேலதிக விபரம் தேவையா?***
*பச்சைக் கொள்கலம் பற்றி நீங்கள் ஏதாவது கேட்டறிய விரும்பினால், எமது வாடிக்கையாளர் சேவையை அழைக்கவும்: 416-338-2010. அல்லது எமது இணையத் தளத்தை அணுகவும்:*
www.toronto.ca/greenbin